**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 152** **நாள்: 14.05.2026**

**மாண்புமிகு அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா அவர்கள் தலைமையில், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

மாண்புமிகு அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டல அலுவலகக் கூட்டரங்கில், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் இன்று (14.05.2026) நடைபெற்றது.

வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டுகளான 94, 95, 96, 97, 98, மற்றும் 104 பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், கட்டடத்துறைகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டடப் பணிகள், பொதுப் பணிகள், பூங்காக்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், உள் மற்றும் வெளி விளையாட்டு அரங்குகள், கால்நடைக் காப்பகங்கள், மயான பூமி மேம்பாட்டுப் பணிகள், இறைச்சிக் கூடங்கள், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுப் பணிகள், மின் துறை சார்ந்தப் பணிகள் மற்றும் சிறப்புத் திட்டப் பணிகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளும், தமிழ்நாடு மின்சாரம் வாரியம், மாவட்ட வருவாய்த் துறை, குடிசை மாற்று வாரியம், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், பொதுப் பணித் துறை, நீர்வளத்துறை, உள்ளிட்ட பல்வேறு துறைகள் மூலமாக வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் பாதுகாப்பு பணிகள் தொடர்பாக காவல் துறை அலுவலர்களிடமும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

**இந்த ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊழலற்ற தூய்மையான ஆட்சியினை வழங்கிடவும், மக்களுக்கான திட்டங்களை எவ்வித தவறுகளுமின்றி விரைந்து செயல்படுத்திடவும் உறுதி பூண்டுள்ளார்கள். வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் சட்டமன்ற வேட்பாளராக நான் போட்டியிட்ட நிலையில், மக்களிடம் செல்லும்போது பல்வேறு குறைபாடுகளை நேரடியாக என்னிடம் தெரிவித்தார்கள். நானும் செல்லும் இடங்களில் எல்லாம், அடிப்படை வசதிகள் குறித்து நேரில் பார்வையிட்டும் மக்களிடம் கேட்டும் அறிந்து கொண்டேன். அவற்றையெல்லாம் தொகுத்து அலுவலர்களிடத்தில் துறைவாரியாக தெரிவித்து வழங்குகிறேன். இதன் மீது தனிக் கவனம் செலுத்தி குறிப்பிட்ட காலத்திற்குள் இப்பணிகளை நிறைவேற்றிட உரிய நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும். போதைப் பொருட்கள் விற்பனையை கட்டுப்படுத்த காவல்துறை தீவிர நடவடிக்கை எடுத்திட வேண்டும். பெண்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, பெண்கள் செல்லும் பாதைகளில் உள்ள டாஸ்மாக் கடைகளை அகற்றி ஊரின் வெளிப்புறப் பகுதியில் கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் கல்விக் கூடத்திற்கு அருகில் உள்ள ஒரு டாஸ்மாக் கடை அகற்றப்பட்டுள்ளது. தற்போது இத்தொகுதியில் 11 டாஸ்மாக் கடை உள்ளது. இந்த டாஸ்மாக் கடைகளை மேலும் குறைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சாலைகளை சீரமைத்திட வேண்டும். நீண்ட நாட்களாக அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடத்தில் வசிக்கும் மக்களுக்கு பட்டாவை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மக்கள் பாதிப்படையாமல் அவர்களுக்கான திட்டங்களை செயல்படுத்த வேண்டும். தேவையான இடங்களில் மின்விளக்குகள் அமைத்திட வேண்டும். மின் மாற்றிகள் சில இடங்களில் உயரம் குறைவாக வைக்கப்பட்டுள்ளது. அதனை உரிய வழிகாட்டுதலின்படி உயர்த்தி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தடையின்றி மின்சாரம் வழங்கிட உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும். அதற்குத் தேவையான துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சாலை சீரமைப்புப் பணிகள் மற்றும் தேவைப்படும் இடங்களில் சாலைகள் அமைத்தல் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும். பெண்களுக்கான தனி ஒப்பனை அறைகள் அமைத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும். பெண்களின் பாதுகாப்பு மற்றும் போதைப் பொருள்களில் இருந்து மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்களைப் பாதுகாக்கும் காக்கும் நடவடிக்கைகள உடனடியாக மேற்கொள்ள வேண்டும். காவல் நிலையங்களில் புகார் கொடுக்க வருபவர்களிடத்தில் கண்ணியமான முறையில் காவல் துறையினர் புகார்களைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அனைத்து காவல் நிலையங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் வைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மின்தடை தொடர்பாக மக்கள் மின்துறை அலுவலகத்திற்கு தொடர்பு கொள்ள கட்டணமில்லா தொலைபேசி 94987 94987 என்பதை அனைத்து மக்களுக்கும் தெரியப்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மக்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் இன்றி நியாயவிலைக் கடைகளில் பொருள்கள் வழங்கப்பட வேண்டும். பெரும்பாலான நியாய விலைக் கடைகள் வாடகை கட்டடத்தில் அமைந்துள்ளது. அதனை சொந்த கட்டிடத்தில் இயங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் பொறியியல் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரி, மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட வேண்டும். மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை சிறப்பாக நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக செயல்பட வேண்டும்.

நாய் தொல்லைகளை கட்டுப்படுத்துவதற்கு கால்நடைகள் சாலையில் சுற்றித் திரிவதைப் கட்டுப்படுத்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, ஊழலற்ற நிர்வாகத்தை வழங்கிடும் வகையில், மக்களுக்குத் தேவையான திட்டங்களை எந்த ஒரு தவறும் இன்றி உரிய காலத்தில் சிறப்பாக நிறைவேற்றிட வேண்டும். இதற்கு அனைத்துத் துறை அலுவலர்களும் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும். இந்த அரசு அனைத்து தரப்பு மக்களுக்கான அரசாக செயல்படும் என்று பேசினார்.

பின்னர், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு-94, அன்னை சத்தியா நகர் பகுதியில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட பகுதிகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட குடியிருப்பு வாசிகளின் குறைகளை கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர் (வடக்கு) திரு.பிரவேஷ்குமார், இ.கா.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு.கௌரவ் குமார், இ.ஆ.ப., மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**